[திரு. துரைமுருகன்] [2022 மே 10

(குறுக்கீடு) No. No. நான் சொல்வதைக் கேளுங்கள். எல்லா சரக்கையும் கொடுத்து—எல்லாவற்றையும் செய்தாகிவிட்டது. Collector-களுக்கு instructions கொடுத்துவிட்டோம். யார் வேண்டுமானாலும் போய் வாங்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். எங்கேயாவது ஓர் இடத்தில் வழங்கவில்லை என்றால் சொல்லுங்கள், நான் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தளவாய் சுந்தரம், போதும். உட்காருங்கள்.*

(உ) நூல் விலை ஏற்றம், விசைத்தறி மற்றும் பின்னலாடைத் தொழிலாளர்கள், வேலைநிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி, ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.*

திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு மண்டலம் முழுவதும் நூல் விலை ஏற்றத்தின் காரணமாக விசைத்தறிகள்* strike-*ல் இருக்கின்றன. பின்னலாடை தொழிலைச் சார்ந்தோரும், இரண்டு நாட்கள் அதாவது, மே 16 மற்றும் 17 ஆகிய நாட்களில்* strike *என்று அறிவித்திருக்கின்றார்கள். இறக்குமதி வரியைக் குறைத்த பின்னரும் நூல் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. ஆகவே, இந்த ஒரு வார காலமாக அங்கு பதற்றமான சூழ்நிலை இருக்கின்றது. நூல் விலையைக் குறைப்பதற்கு* Commodities-*ஐ* Online *வர்த்தகத்திலிருந்து எடுக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒன்றிய அரசு* Essential Commodities-*லிருந்து நீக்கியிருக்கிறது.* Stock-*ஐ* unlimit *செய்திருக்கிறது. ஒன்றிய அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக அவர்கள்* strike *செய்கிறார்கள். இது* State Government-*ன் சமாச்சாரம் இல்லை. நீங்கள், உங்கள் கருத்தைப் பதிவு செய்துவிட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.K. *செல்வராஜ் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி, அன்றைக்கு நான் உங்களுக்கு 12 நிமிடங்கள் பேச வாய்ப்பு கொடுத்து, நீங்கள் பேசிவிட்டீர்கள். போதும், உட்காருங்கள்.* Please. *போதும், உங்களது கருத்தைப் பதிவு செய்தாகிவிட்டது. உட்காருங்கள்.*

(ஊ) மேட்டுப்பாளையம், புறவழிச்சாலை அமைத்தல் மற்றும் சிறுமுகை, லிங்காபுரம் பகுதி, காந்தவியலில் உயர்மட்டப் பாலம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.K. *செல்வராஜ் அவர்கள்.*

2022 மே 10]

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் நகரத்திற்கு புறவழிச் சாலை அமைப்பது தொடர்பாகவும், சிறுமுகை, லிங்காபுரம் தாலுகா பகுதிகளில் இருக்கிற காந்தவியல் பகுதியில் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டுவது சம்பந்தமாகவும் ஏற்கெனவே நான் இந்த அவையில் பேசியிருக்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி. நான் அதனைப் பதிவு செய்து விட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் வாங்கித் தருவார்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) போதும்.*

(எ) போளூர், பள்ளி மேற்கூரை இடிந்து விழுந்து மாணவர் உயிரிழந்தது, நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்றத் தொகுதி, போளூரில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு +1, +2 படிக்கின்ற மாணவர்கள் விடுதியில் இரவில் தூங்கிக்கொண்டிருந்தபோது, மேற்கூரை இடிந்து விழுந்ததன் காரணமாக சம்பவ இடத்திலேயே +1 மாணவர் ஒருவர் உயிரிழந்திருக்கிறார். மற்றொரு மாணவர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெறுகிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரண நிதியிலிருந்து சிகிச்சைக்காக அந்த மாணவருக்கு . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அரசின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். வேண்டிய உதவிகள் கிடைக்கும். (குறுக்கீடு) வேண்டிய உதவிகள் கிடைக்கும்.*

(ஏ) வேளச்சேரி தொகுதி, இஸ்லாமியர்களுக்கு தனி இடுகாடு அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள், ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.*